**புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------

புதுப்பிக்கத்தக்க சக்தி உறிஞ்சல் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 02 ஆம் திகதிய 101104 எல் ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2016 நவம்பர் 18 ஆம் திகதிய சீஎல்கே 101104 எல் ஆம் இலக்க திருத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்திட்டத்தின் கடன் வசதி உடனபடிக்கைகளின் பிரகாரம், மின்வலு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. எரிசக்தி மின்சார விநியோக அமைப்பு உறிச்சல் இயலளவை அதிகரித்து சராசரி உற்பத்திக் கிரயங்களை குறைப்பதன் மூலம் தேசிய மின்சார விநியோக அமைப்பிற்கு புதுப்பிக்கத்தக்க சக்தியை உறிஞ்சுதலே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மாலிபொட, வெவல்வத்த, நாவலப்பிட்டிய, றாகல போன்ற இடங்களில் 132/33 கேவி உப நிலைய கட்ட நிர்மாணம் என்ற பெயரில் நான்கு கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் வசதி உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,660.10 மில்லியனிற்குச் சமமான யூரோ 41.10 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 4,865.90 மில்லியனிற்குச் சமமான யூரோ 30 மில்லியன் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 1,794.20 மில்லியனிற்கு சமமான 11.1 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2018 சனவரி 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஒக்தோபர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2023 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

என்னனுடைய அறிக்கையின் பந்தி 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாருடைய பரிந்துரை |
|---|---|---|---|---|
| --- | ------------------------------ | --------- | -------------------- | ------------------ |
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு நாட்டு வளங்கள் திணைக்களத்தின் கூற்றில் காட்ப்பட்ட கைதவிர்ப்பிற்கும் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கைதவிர்ப்பிற்கும் இடையில் ரூபா 6.6 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இது இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 6.6 | AFD ஆல் மொத்த பங்களிப்பு யூறோ 23,119,580 ஆன தொகைகள் செய்யப்பட்டதுடன் AFD ஊடாக கொடுப்பனவுகள் செய்வதற்கு சகல இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களும் முறையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. யூரோ 28,227 (US.30,430.28) இற்காக கைதவிர்க்கப்பட்ட தொகைக்குரிய கொடுப்பனவுச் சான்றிதழ் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கூற்றில் பதியப்பட்டிருக்கவில்லை. | வித்தியாசங்களை தெளிவாக்குவதற்கு AFD பங்களிப்பை சரியாக குறிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | AFD நிதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 182.7 மில்லியன் தொகையான மோட்டார் வாகனங்களின் கிரயம் 2022 தசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாகனங்களின் மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 182.7 | இது ஏற்கனவே REATDP இன் 2023 ஆம் ஆண்டு நிதிதிக்கூற்றில் திருத்தப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் உரிய கணக்கீட்டுக் கொள்கையுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு தொடர்புபட்ட விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான ரூபா 1 மில்லியன் மற்றும் ரூபா 0.4 மில்லியன் தொகையான வட்டி வருமானம் CEB இனுடைய பங்களிப்பாக பதியப்படாமல் முறையே ஒப்பந்தகாரருடைய கணக்கு மற்றும் மூலதன பங்களிப்பின் கீழ் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 1.4 | இது ஏற்கனவே REATDP இன் நிதிதிக்கூற்றில் 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருந்தது. | விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது CEB இற்கு ஒப்பந்தகாரரிடமிருந்து மாற்றப்பட்ட ரூபா 13.2 தொகையாக AFD நிதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் கிரயம் நடைபெறும் வேலைகளிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் ஒப்பந்தகாரருடைய கணக்கு அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | 13.2 | இது ஏற்கனவே REATDP இன் நிதிதிக்கூற்றில் 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருந்தது. | மாற்றப்பட்ட வாகனங்களின் கிரயம் சரியாக கணணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | செயற்திட்ட நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் காணி மற்றும் எரிபொருள் வைப்புக்களில் ரூபா 8.5 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்படாது இருந்தது. மேலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி மற்றும் எரிபொருள் வைப்புக்கள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | 8.5 | காணி மற்றும் எரிபொருள் வைப்புக்கள் 2024 ஆம் ஆண்டில் சரிசெய்யப்பட்டன. REATDP இன் நிதிதிக் கூற்றில் 2024 ஆம் ஆண்டில் எவ்வித மீதிகளும் இருக்கவில்லை. | காணி மற்றும் எரிபொருள் வைப்புக்களின் தீர்ப்பனவை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை அரசாங்கத்தால் இறுக்கப்பட்ட ரூபா 138.6 மில்லியன் தொகையான கடன்படல் கிரயம் மற்றும் ரூபா 102.5 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் என்பன செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 241.1 | இந்த கடன் GOSL ஆல் பெறப்பட்டு CEB இற்கு வழங்கப்பட்டிருந்தது. எனவே, கடன்படல் கிரயத்தை அனுமதிப்பதற்கு CEB இற்கு பொறிமுறையெதுவம் இருக்கவில்லை ஆதலால் கவனத்தில் கொள்ளப்படவில்லை. | இந்த விடயம் கணக்கீட்டுக் கொள்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாருடைய பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்கீடு மீதான முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் நிதிக்கூற்றுக்கள் தயாரித்த பின்னர் நியாயமான காலப்பகுதிக்குள் (அண்ணளவாக 02 மாதங்களிற்குள்) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்க வேண்டும். 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2024 ஆகஸ்ட் 20 இலேயே கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டது. | முகாமைத்துவ கருத்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரித்த பின்னர் நியாயமான காலப்பகுதிக்குள் (அண்ணளவாக 02 மாதங்களிற்குள்) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும். |